செய்தி வெளியீடு எண் : 1156 நாள் : 12.07.2022

<u>செய்தி வெளியீடு</u>

**மாமல்லபுரத்தில் நடைபெறஉள்ள 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (12.7.2022) 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறவுள்ள மாமல்லபுரம், பூஞ்சேரி கிராமத்தில், போர்பாயிண்ட்ஸ் ஷெரட்டன் நட்சத்திர விடுதி வளாகத்தில், செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சிறப்பாக நடத்துவது தொடர்பாக சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சிறப்பாக நடத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசுத்துறை செயலாளர்கள், உயர் அலுவலர்கள் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் அடங்கிய பணிக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்ற சிறப்பு ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர்களுடன் ஒருங்கிணைந்து, மாவட்டங்களில் செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, இச்செஸ் போட்டி குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்றும், 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை அமைத்து விளையாட்டு வீரர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் துரிதமாக வழங்கிட வேண்டும் என்றும், இச்சதுரங்க விளையாட்டு போட்டிகளை பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் போட்டி நடைபெறும் அரங்குகளில் டிஜிட்டல் போர்டுகளை வைத்திட வேண்டும் என்றும், விளையாட்டு போட்டி நடைபெறவுள்ள அரங்குகளின் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், பூஞ்சேரி கிராமத்தில், போர்பாயிண்ட்ஸ் ஷெரட்டன் நட்சத்திர விடுதி வளாகத்தில், 52,000 சதுர அடியில் சதுரங்க விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்காக அமைக்கப்பட்டு வருகின்ற நவீன உள் விளையாட்டரங்கம், ஏற்கனவே அப்பகுதியில் உள்ள 22,000 சதுர அடியிலான அரங்கத்தினை விளையாட்டரங்கமாக மேம்படுத்தும் பணி, வாகனங்கள் நிறுத்துமிடம், சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருவது குறித்தும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விளையாட்டு வீரர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

44வது சர்வதேச சதுரங்கப் போட்டி, பல்லவர் காலச் சிற்பக் கலையினை பறைசாற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான மாமல்லபுரத்தில் 28.7.2022 முதல் 10.8.2022 வரை மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளது.

இப்போட்டியில், 187 நாடுகளைச் சேர்ந்த 2000க்கும் மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்கேற்க உள்ளனர். தமிழ்நாட்டிற்கு வருகை தரும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை வரவேற்க மிகச் சிறப்பான ஏற்பாடுகள் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்யப்பட்டு வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற வீரர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், சர்வதேச சதுரங்க கூட்டமைப்பினர் மற்றும் விருந்தினர்கள் தங்குவதற்காக நவீன வசதிகளுடன் கூடிய நட்சத்திர விடுதிகளில் 2,000 அறைகள் மற்றும் வாகன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிக்கான தொடக்க விழா மிகப் பிரம்மாண்டமாக சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் 28.7.2022 அன்று நடைபெற உள்ளது. இத்தொடக்க விழாவில், தமிழ்நாட்டின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை உலக மக்கள் அனைவரும் அறியும் வகையில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

44வது சர்வதேச சதுரங்கப் போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.6.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தினார். இப்போட்டியினை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு முதல் பங்களிப்பாக 92 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை முன்னிட்டு 19.6.2022 அன்று டெல்லி, இந்திராகாந்தி உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் கலந்து கொண்டு ஒலிம்பியாட் தீபத்தினை ஏற்றி வைத்து, தீபச்சுடர் ஓட்டத்தினை தொடங்கி வைத்தார்.

இந்த ஒலிம்பியாட் தீபம் நாற்பது நாட்களில் இந்தியாவில் 26 மாநிலங்களில் உள்ள 75 நகரங்களில் பயணித்து இறுதியாக மாமல்லபுரம் வந்தடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. முக்கியப் பிரமுகர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களைக் கொண்டு 15 இடங்களில் ஒலிம்பியாட் தீபத்தினை வரவேற்று கலைநிகழ்ச்சிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன்,

விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் திரு. அசோக் சிகாமணி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தனம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., செஸ் ஒலிம்பியாட் சிறப்பு அலுவலர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஞ்சய் கபூர், செயலாளர் திரு.பரத் சிங் சவுகான், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சதுரங்க கூட்டமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in